முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

**Ar.O.P.39/2021**

**நாள்.12.08.2024**

ம.சா.1 திரு.அதிவீரபாண்டியன் மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

தேசிய நெடுஞ்சாலைக்காக சர்வே எண்.132/1B/2A என்ற நிலத்தை ஆர்ஜிதம் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான். என்னுடைய ஆர்ஜிதம் செய்த நிலமும் மாதிரிக்கு எடுக்கப்பட்ட நிலமும் அருகருகே அமைந்துள்ளது என்றால் சரியல்ல. வருவாய்த்துறை ஆவணங்களில் ஆர்ஜிதம் செய்த என்னுடைய நிலமானது நஞ்சை நிலம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆர்ஜிதம் செய்த என்னுடைய நிலத்திற்கு ஒரு சதுர அடிக்கு 147 என்று அரசால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்து என்றால் அது தவறு, 2011ம் ஆண்டு ஆர்ஜிதம் செய்த நிலத்திற்கு ஒரு சதுர அடிக்கு 3130 என்று அரசு மதிப்பீடு இருந்தது. நான் இவ்வாறு சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல. மாதிரி நிலமானது ஆர்ஜிதம் செய்யப்பட்ட காலக்கட்டத்தில் வீட்டுமனை என்று வகைப்பாடு செய்து மதிப்பீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய நிலமும் வீட்டுமனை நிலம்தான்.

மறு விசாரணை – இல்லை.

ஒப்பம்/எஸ். குமரகுரு, ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .